DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No.46/2019**

அ.சா.5

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | கயல்விழி | Caste: | |
| Husband Name: | கண்ணன் | Calling: | |
| Village: | மூலவயல் | Religion: | |
| Taluk: | ஆர்.எஸ்.மங்கலம் | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 06.08.2024.

(எதிரி ஆஜர் .)

**முதன்மை விசாரணை**

நான் மூலவயல் கிராமத்தில் குடியிருந்து வந்தேன். தற்போது காரைக்குடியில் குடியிருக்கிறேன். செல்வகுமார், தமயந்தி ஆகியோரை தெரியும் . ஆஜர் எதிரியை தெரியும். இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. டிஎஸ்பி என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி மேற்சொன்ன சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-**

இவ்வழக்கு சம்பந்தமாக 30.06.2019 அன்று திருவாடனை டிஎஸ்பி என்னை விசாரித்தார் என்றும், 28.06.2019 அன்று மாலை சுமார் 5.40 மணியளவில் எங்கள் வீட்டிற்கு முன்பு உள்ள பஸ்ஸ்டாப்பில் செல்வகுமார் ,வீரமுத்து, குப்பு, குப்பமுத்து ஆகியோர் உட்கார்ந்து

பேசிக்கொண்டிருந்தபோது ஆஜர் எதிரியும் மூலவயல் காலணியைச் சேர்ந்த அழகர் என்பவரும் குடிபோதையில் வந்து வீண் வம்பு செய்து கொண்டிருந்தார் என்றும், ஆஜர் எதிரி குடிபோதையில் என்னை பார்த்து நீ இனிமேல் என் ஏரியா பக்கம் உன் செம்மறி ஆடுகளை மேய்ச்சலுக்கு ஓட்டிட்டு வந்து தண்ணீக்கு காட்டுனினா செம்மறி ஆட்டின் தோளையும் உன் தோளையும் உறிச்சிடுவேன் என்று மிரட்டினார் என்றும் அன்று இரவு சுமார் 07.30 மணிக்கு நான் வீட்டில் இருந்தபோது சத்தம் கேட்டு வெளியே வந்து பார்த்த போது ஆஜர் எதிரி பெருமாள் மீண்டும் குடிபோதையில் தமயந்தியைப் பார்த்து ஏண்டி அவுசாரி முண்ட உன்னையும் உன் குடும்பத்தையும் கொல்லாமல் விடமாட்டேன்டி உன் புருசன் என் மேல் கேஸ் கொடுத்து என்ன கிழிச்சுட்டான் ஊரை விட்டு ஓடி போய்விடுங்கடி என்று மிரட்டினார் என்றும், தமயந்தி பயந்து கொண்டு எங்கள் வீட்டின் கேட்டின் வழியாக ஓடிவந்து ஆஜர் எதிரி விரட்டி வந்து தகாத வார்த்தைகளால் திட்டினார் என்றும் டிஎஸ்பி விசாரித்த போது சொன்னேன் என்றும் தற்போது எதிரி என் ஊர்க்காரர் என்பதால் எதிரியை காப்பாற்ற உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –** இல்லை.

Sd/- S.Uthamaraj
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)